**<u>In the Court of the Subordinate Judge's Court, Gudiyattam, Vellore District</u>**
**<u>Deposition of Witness</u>**

**M.C.O.P.No.176/2022**

**Deposition of witness for RW1**

| **Name** | : | திரு.எம்.சிட்டிபாபு | | | |
|---|---|---|---|---|---|
| **Father / Husband Name** | : | மணிவேலு | **Occupation** | : | நிர்வாக அதிகாரி |
| **Village/Work** | : | ரங்காபுரம் வேலூர் | **Religion** | : | இந்து |
| **Taluk/City** | : | வேலூர் | **Age** | : | 50 |

**Solemnly affirmed in accordance with be provision of Act of 1873 on the date of <u>16.04.2026</u> (Thursday)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் 2ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். எதிர்மனுதாரர் தரப்பு முதல் சாட்சி. நான் என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக பரிசீலனை செய்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> (மனுதாரர் தரப்பில்)**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று விபத்து சம்பந்தப்பட்ட TN 02 M 2245 என்ற மினி லாரிக்கு காப்பீடு உள்ளது என்றால் சரிதான். அந்த காப்பீடு விபத்து காலத்தில் நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். அந்த மினிலாரி ஓட்டுனர் தேவேந்திரன் என்பவர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மினிலாரி ஓட்டுனர் தேவேந்திரனுக்கு முறையான ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காப்பீடு 03.02.2022 முதல் 02.02.2023 வரை நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். காப்பீடு செய்யும் போது வாகனங்களுக்கு பர்மிட் உள்ளதா என்று பார்த்துதான் கொடுப்போம் என்றால் சரிதான், முதன் முதலில் காப்பீடு செய்யும் போது பர்மிட் பார்ப்போம், அதன் பின்பு புதுப்பிக்கும் போது அதை பார்க்கும்

வழக்கம் இல்லை. அதனால் மேற்படி 03.02.2022 அன்று காப்பீடு செய்த போது லாரிக்கு பர்மிட் இருந்ததா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, புதுப்பிப்பு என்பது தானாகவே நடந்துவிடும். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து இயந்திர கோளாறு காரணமாக ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர்தான் சாட்சியம் அளிக்க வேண்டும். மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நான் கொண்டு வந்துள்ள ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். அதை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த அறிக்கை குறித்து நான் எங்கள் காப்பீட்டு நிறுவன விசாரணை அலுவலரிடமோ அல்லது மேலதிகாரியிடமோ கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் எந்த ஒரு விவரமும் இல்லாமல் காரண காரியமும் இல்லாமல் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, இருசக்கர வாகன ஓட்டியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாகவும் அவர் எந்தவித ஆவணமும் இல்லாமல் வண்டி ஓட்டியதே காரணம். மேற்படி இவ்விபத்தில் இறந்துவிட்ட சிவக்குமார் எங்கள் காப்பீடு நிறுவனத்தை பொறுத்து மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். நாங்கள் மேற்படி இவ்வழக்கில் இறந்துவிட்ட மனுதாரரின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு கொடுக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் தவறான சங்கதிகளை கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் அது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Taken down by me in Open Court
read over to the deponent and
admitted by her/him to be correct.

PRABU K Digitally signed by PRABU K

**Subordinate Judge, Gudiyatham**